ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ ஏனமுனாகி ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஏனமுனாகி ॥

திருவதரியாச்சிராமம்

‡ஏன முனாகி இரு நிலம் இடந்து⋆
அன்றிணையடி இமையவர் வணங்க⋆
தானவன் ஆகம் தரணியில் புரளத்⋆
தடஞ்சிலை குனித்த என் தலைவன்⋆
தேனமர் சோலைக் கற்பகம் பயந்த⋆
தெய்வ நல் நறு மலர் கொணர்ந்து⋆
வானவர் வணங்கும் கங்கையின் கரைமேல்⋆
வதரி ஆச்சிராமத்துள்ளானே (1)

கானிடை உருவைச் சுடு சரம் துரந்து⋆
கண்டு முன் கொடுந் தொழில் உரவோன்⋆
ஊனுடை அகலத்தடு கணை குளிப்ப⋆
உயிர் கவர்ந்துகந்த எம் ஒருவன்⋆
தேனுடைக் கமலத்தயனொடு தேவர்⋆
சென்று சென்றிறைஞ்சிட⋆ பெருகு
வானிடை முது நீர்க் கங்கையின் கரைமேல்⋆
வதரி ஆச்சிராமத்துள்ளானே (2)

இலங்கையும் கடலும் அடல் அரும் துப்பின்⋆
இரு நிதிக்கிறைவனும்⋆ அரக்கர்
குலங்களும் கெடமுன் கொடுந் தொழில் புரிந்த
கொற்றவன்⋆ கொழுஞ்சுடர் சுழன்ற⋆
விலங்கலில் உரிஞ்சிமேல் நின்ற விசும்பில்⋆
வெண் துகில் கொடி என விரிந்து⋆
வலம் தரு மணி நீர்க் கங்கையின் கரைமேல்⋆
வதரி ஆச்சிராமத்துள்ளானே (3)

www.prapatti.com

துணிவினி உனக்குச் சொல்லுவன் மனமே!⋆
    தொழுதெழு தொண்டர்கள் தமக்கு⋆
பிணி ஒழித்தமரர் பெரு விசும்பருளும்⋆
    பேர் அருளாளன் எம் பெருமான்⋆
அணி மலர்க் குழலார் அரம்பையர் துகிலும்⋆
    ஆரமும் வாரி வந்து⋆ அணி நீர்
மணி கொழித்திழிந்த கங்கையின் கரைமேல்⋆
    வதரி ஆச்சிராமத்துள்ளானே (4)

பேய் இடைக்கிருந்து வந்த மற்றவள் தன்⋆
    பெரு முலை சுவைத்திட⋆ பெற்ற
தாய் இடைக்கிருத்தல் அஞ்சுவன் என்று
    தளர்ந்திட⋆ வளர்ந்த என் தலைவன்⋆
சேய் முகட்டுச்சி அண்டமும் சுமந்த⋆
    செம் பொன் செய் விலங்கலில் இலங்கு⋆
வாய் முகட்டிழிந்த கங்கையின் கரைமேல்⋆
    வதரி ஆச்சிராமத்துள்ளானே (5)

தேர் அணங்கல்குல் செழுங்கயற் கண்ணி
    திறத்து⋆ ஒரு மறத் தொழில் புரிந்து⋆
பார் அணங்கிமில் ஏறேழு முன் அடர்த்த⋆
    பனி முகில் வண்ணன் எம் பெருமான்⋆
காரணம் தன்னால் கடும் புனல் கயத்த⋆
    கரு வரை பிளவெழக் குத்தி⋆
வாரணம் கொணர்ந்த கங்கையின் கரைமேல்⋆
    வதரி ஆச்சிராமத்துள்ளானே (6)

வெந் திறல் களிறும் வேலைவாய் அமுதும்⋆
    விண்ணொடு விண்ணவர்க்கரசும்⋆
இந்திரற்கருளி எமக்கும் ஈந்தருளும்⋆
    எந்தை எம் அடிகள் எம் பெருமான்⋆
அந்தரத்தமரர் அடி இணை வணங்க⋆
    ஆயிர முகத்தினால் அருளி⋆



www.prapatti.com

மந்தரத்திழிந்த கங்கையின் கரைமேல்⋆
    வதரி ஆச்சிராமத்துள்ளானே (7)

மான் முனிந்தொரு கால் வரி சிலை வளைத்த
    மன்னவன்⋆ பொன் நிறத்துரவோன்⋆
ஊன் முனிந்தவன் உடல் இரு பிளவா⋆
    உகிர் நுதி மடுத்து⋆ அயன் அரனைத்
தான் முனிந்திட்ட⋆ வெந் திறல் சாபம்
    தவிர்த்தவன்⋆ தவம் புரிந்துயர்ந்த
மா முனி கொணர்ந்த கங்கையின் கரைமேல்⋆
    வதரி ஆச்சிராமத்துள்ளானே (8)

கொண்டல் மாருதங்கள் குல வரை தொகு நீர்க்⋆
    குரை கடல் உலகுடன் அனைத்தும்⋆
உண்ட மா வயிற்றோன் ஒண் சுடர் ஏய்ந்த⋆
    உம்பரும் ஊழியும் ஆனான்⋆
அண்டம் ஊடறுத்தன்றந்தரத்திழிந்து⋆
    அங்கவனியாள் அலமர⋆ பெருகும்
மண்டு மா மணி நீர்க் கங்கையின் கரைமேல்⋆
    வதரி ஆச்சிராமத்துள்ளானே (9)

‡வருந் திரை மணி நீர்க் கங்கையின் கரைமேல்⋆
    வதரி ஆச்சிராமத்துள்ளானை⋆
கருங்கடல் முன் நீர் வண்ணனை எண்ணிக்⋆
    கலியன் வாய் ஒலி செய்த பனுவல்⋆
வரம் செய்த ஐந்தும் ஐந்தும் வல்லார்கள்⋆
    வானவர் உலகுடன் மருவி⋆
இருங்கடல் உலகம் ஆண்டு வெண் குடைக் கீழ்⋆
    இமையவர் ஆகுவர் தாமே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com